# 8 டால்பின்®

உன்னால் முடியும்

# தமிழ்



100/100 உறுதி

புதிய பதிப்பு

அரசு புதிய பாடத்திட்டத்தின் படி
வினாக் குறிப்பு அடிப்படையில்
தயாரிக்கப்பட்ட சிறப்பு உரைநூல்

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

# ஆர்டர்களுக்கு மாவட்ட வாரியாக எங்கள் நிர்வாக எண்களை தொடர்பு கொள்ளவும்.

அரியலூர்
செங்கல்பட்டு
சென்னை
கோயம்புத்தூர்
கடலூர்
தர்மபுரி
திண்டுக்கல்
ஈரோடு
— 98653 06197

கள்ளக்குறிச்சி
காஞ்சிபுரம்
கரூர்
கிருஷ்ணகிரி
மதுரை
மயிலாடுதுறை
நாகப்பட்டினம்
கன்னியாகுமரி
— 89256 77710

நாமக்கல்
பெரம்பலூர்
புதுக்கோட்டை
— 99435 67646

இராமநாதபுரம்
ராணிப்பேட்டை
சேலம்
சிவகங்கை
தென்காசி
— 99435 67646

தஞ்சாவூர்
தேனி
திருவள்ளூர்
திருவாரூர்
தூத்துக்குடி
திருச்சி
திருநெல்வேலி
— 93453 14146

திருப்பத்தூர்
திருப்பூர்
திருவண்ணாமலை
நீலகிரி
வேலூர்
விழுப்புரம்
விருதுநகர்
— 93453 30937

எங்களது ஒரே நிறுவனம் டால்பின் பப்ளிகேசன்ஸ் மட்டுமே. எங்களுக்கு வேறு இணை நிறுவனங்கள் எதுவும் கிடையாது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

# டால்பின்®

# உன்னால் முடியும்

# தமிழ்

**புதிய பதிப்பு**

# 8

**அரசு புதிய பாடத்திட்டத்தின் படி**
**விடைக் குறிப்பு அடிப்படையில்**
**தயாரிக்கப்பட்ட சிறப்பு உரைநூல்**

✆ 98653 06197 | 89256 77710 | 99435 67646

**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

தரமே எங்களின் தாரக மந்திரம்

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com

© All Copyrights reserved

**விலை : ரூ.153**

# பதிப்புரை

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"

ஆம்! உலகிற்கு எல்லாம் ஒளியாகத் திகழும் நம் தாய் மொழியாகிய தமிழைக் கற்பதில் நாம் அனைவரும் பெருமை கொள்வோம்.

அழகிய தமிழாய் எட்டாம் வகுப்பு பாடப் புத்தகத்தில் பொதிந்திருக்கக் கூடிய தமிழ் மகளை அணி செய்து, பாராட்டி, சீராட்டி, தேவதையாய் காட்சி பெறச் செய்து அளித்துள்ள "**டால்பின்**" தமிழ் உரை ஏட்டினைப் படித்து, அறிவில் சுடர் உடையவர்களாகத் திகழ்ந்து, தேர்வுகளைத் தைரியமுடன் எதிர் கொண்டு தமிழ்ப் பாடத்திலே மகத்தான வெற்றியினை பெறுவீர்களாக!

இந்த அழகிய உரை தாங்கிய ஏடானது, எளிமையும் இனிமையும் நிறைந்ததாக அமைந்திருக்கிறது. தங்களுடைய அறிவினைத் தூண்டி படைப்பாளர்களாக உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் இந்த ஏடு அமைந்திருக்கிறது. அழகிய மொட்டாக உருவாக்கப்பட்ட பாடப்புத்தகத்தினை, மலராக மலரச் செய்து அதன் மணத்தை நுகரச் செய்து அதன் பின் கனியாக சுவைப்பதற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உங்களுடைய தேடுதல் நேரத்தை குறைத்து தேவையான அனைத்தையும் இந்த ஏட்டின் உள்ளே புதைத்து வைத்துள்ளோம். படித்து பயன் பெறுக! தாய்நாட்டிற்கும், தாய் மொழிக்கும் என்றும் கடமையாற்ற முனைப்போடு இருங்கள்! நம் நாடு, நம் மொழி நமது இரு கண்கள் என்று உணர்க!

வாழ்க தமிழ்மொழி ! வளர்க தமிழ்த்திருநாடு !

வாழ்த்துகளுடன்

**டால்பின் பப்ளிகேசன்ஸ்**

## புத்தகங்களைப் பெறுவதற்கு

**மரியாதைக்குரிய தலைமையாசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு !**

வணக்கம். **டால்பின் பப்ளிகேஷன்ஸ்** நிறுவனத்திற்கு தாங்கள் வழங்கி வருகின்ற பேராதரவிற்கு எங்களின் சிரம்தாழ்ந்த நன்றிகள். நீங்களே எங்களின் வளர்ச்சியின் அடித்தளம். தற்பொழுது தாங்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களை பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களைப் பெற**

| | |
|---|---|
| அலைபேசி எண் (Mobile No) | : **9865306197 / 8925677710 / 9943567646** |
| கட்செவி எண் (Whatsapp No) | : **9345314146** |
| குறுஞ்செய்தி (Sms) | : **9345330937** |
| வலைதளம் (Website) | : **www.kalvidolphin.com** |
| மின்னஞ்சல் (E-mail ID) | : **dolphin.pub2005@gmail.com** |

## பணம் செலுத்துவதற்கான விவரங்கள்

**கேட்பு வரைவோலை (D.D.) அல்லது காசோலை (Cheque) :**

டால்பின் பப்ளிகேஷன்ஸ் - ஸ்ரீவில்லிபுத்தூர் **(DOLPHIN PUBLICATIONS, SRIVILLIPUTTUR)** என்ற பெயருக்கு எடுத்து அனுப்பவும்.

## வங்கி கணக்கு விவரங்கள்

**ICICI BANK**

A/C No : 446005500030
IFSC CODE : ICIC0004460
BRANCH : Srivilliputtur

**CITY UNION BANK**

A/C No : 328109000204092
IFSC CODE : CIUB0000328
BRANCH : Srivilliputtur

**TAMILNADU MERCANTILE BANK**

A/C No : 328150310875103
IFSC CODE : TMBL0000328
BRANCH : Srivilliputtur

**KARUR VYSYA BANK**

A/C No : 1804135000006000
IFSC CODE : KVBL0001804
BRANCH : Srivilliputtur

ICICI Bank iMobile | BHIM BHARAT INTERFACE FOR MONEY | pockets

Merchant Name : DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362

Steps to Pay UPI QR Code
Open UPI app > Select 'Tap to Pay' > Scan QR Code > Enter Amount

G Pay **94427 17794**
**63743 17883**

**✷ பணம் / G-PAY செலுத்திய பின் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் தகவல் தெரிவிக்கவும்**

**98653 06197, 89256 77710, 99435 67646**

# பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | மனப்பாடப் பகுதிகள் | | | i |
| 1. | மொழி | | தமிழ் இன்பம் | 1 |
| | | கவிதைப்பேழை | தமிழ்மொழி வாழ்த்து ★ | 2 |
| | | | தமிழ்மொழி மரபு | 6 |
| | | உரைநடை உலகம் | தமிழ் வரிவடிவ வளர்ச்சி | 11 |
| | | விரிவானம் | சொற்பூங்கா | 16 |
| | | கற்கண்டு | எழுத்துகளின் பிறப்பு | 19 |
| 2. | இயற்கை | | ஈடில்லா இயற்கை | 27 |
| | | கவிதைப்பேழை | ஓடை ★ | 28 |
| | | | கோணக்காத்துப் பாட்டு | 32 |
| | | உரைநடை உலகம் | நிலம் பொது | 36 |
| | | விரிவானம் | வெட்டுக்கிளியும் சருகுமானும் | 41 |
| | | கற்கண்டு | வினைமுற்று | 44 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ★ | 51 |
| 3. | அறிவியல், தொழில்நுட்பம் | | உடலை ஓம்புமின் | 57 |
| | | கவிதைப்பேழை | நோயும் மருந்தும் ★ | 58 |
| | | | வருமுன் காப்போம் ★ | 61 |
| | | உரைநடை உலகம் | தமிழர் மருத்துவம் | 66 |
| | | விரிவானம் | தலைக்குள் ஓர் உலகம் | 71 |
| | | கற்கண்டு | எச்சம் | 74 |

| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| 4. | கல்வி | கல்வி கரையில | | 84 |
| | | கவிதைப்பேழை | கல்வி அழகே அழகு ✸ | 85 |
| | | | புத்தியைத் தீட்டு | 88 |
| | | உரைநடை உலகம் | பல்துறைக் கல்வி | 91 |
| | | விரிவானம் | ஆன்ற குடிப்பிறத்தல் | 97 |
| | | கற்கண்டு | வேற்றுமை | 100 |
| 5. | கலை, அழகியல், பண்பாடு | குழலினிது யாழினிது | | 111 |
| | | கவிதைப்பேழை | திருக்கேதாரம் | 112 |
| | | | பாடறிந்து ஒழுகுதல் ✸ | 116 |
| | | உரைநடை உலகம் | நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் | 119 |
| | | விரிவானம் | தமிழர் இசைக்கருவிகள் | 124 |
| | | கற்கண்டு | தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள் | 127 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✸ | 134 |
| 6. | நாகரிகம், தொழில், வணிகம் | வையம்புகழ் வணிகம் | | 137 |
| | | கவிதைப்பேழை | வளம் பெருகுக | 138 |
| | | | மழைச்சோறு | 142 |
| | | உரைநடை உலகம் | கொங்குநாட்டு வணிகம் | 145 |
| | | விரிவானம் | காலம் உடன் வரும் | 151 |
| | | கற்கண்டு | புணர்ச்சி | 154 |

| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| 7. | நாடு, சமூகம் | பாருக்குள்ளே நல்ல நாடு | | 161 |
| | | கவிதைப்பேழை | படை வேழம் ★ | 162 |
| | | | விடுதலைத் திருநாள் | 166 |
| | | உரைநடை உலகம் | பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன் | 170 |
| | | விரிவானம் | அறிவுசால் ஔவையார் | 174 |
| | | கற்கண்டு | வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும் | 176 |
| 8. | அறம், தத்துவம், சிந்தனை | அறத்தால் வருவதே இன்பம் | | 184 |
| | | கவிதைப்பேழை | ஒன்றே குலம் ★ | 185 |
| | | | மெய்ஞ்ஞான ஒளி | 188 |
| | | உரைநடை உலகம் | அயோத்திதாசர் சிந்தனைகள் | 191 |
| | | விரிவானம் | மனித யந்திரம் | 196 |
| | | கற்கண்டு | யாப்பு இலக்கணம் | 199 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ★ | 206 |
| 9. | மனிதம், ஆளுமை | குன்றென நிமிர்ந்துநில் | | 210 |
| | | கவிதைப்பேழை | உயிர்க்குணங்கள் | 211 |
| | | | இளைய தோழனுக்கு | 214 |
| | | உரைநடை உலகம் | சட்டமேதை அம்பேத்கர் | 217 |
| | | விரிவானம் | பால் மனம் | 222 |
| | | கற்கண்டு | அணி இலக்கணம் | 225 |
| | மாதிரி வினாத்தாள் | | | 233 |

# மனப்பாடப் பகுதிகள்

## தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!
வாழிய வாழியவே!

வான மளந்தது அனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

**- பாரதியார்**

## ஓடை

ஓடை ஆட உள்ளம் தூண்டுதே! - கல்லில்
உருண்டு தவழ்ந்து நெளிந்து பாயும்

(ஓடை ஆட..)

பாட இந்த ஓடை எந்தப்
பள்ளி சென்று பயின்ற தோடி!
ஏடு போதா இதன்கவிக் கார்
ஈடு செய்யப் போரா ரோடி!

(ஓடை ஆட..)

நன்செய் புன்செய்க்கு உணவை ஊட்டி
நாட்டு மக்கள் வறுமை ஓட்டிக்
கொஞ்சிக் குலவிக் கரையை வாட்டிக்
குளிர்ந்த புல்லுக்கு இன்பம் கூட்டி

(ஓடை ஆட..)

நெஞ்சில் ஈரம் இல்லார் நாண
நீளு ழைப்பைக் கொடையைக் காட்டிச்
செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்
சீருக்கு ஏற்ப முழவை மீட்டும்

(ஓடை ஆட..)

**- வாணிதாசன்**

## திருக்குறள்

**நடுவுநிலைமை**

1. தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.

**கூடா ஒழுக்கம்**

2. கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்.

**கல்லாமை**

3. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

**குற்றங்கடிதல்**

4. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

- திருவள்ளுவர்

## நோயும் மருந்தும்

பேர்தற்கு அரும்பிணி தாம்இவை அப்பிணி
தீர்தற்கு உரிய திரியோக மருந்துஇவை
ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார்
பேர்த்த பிணியுள் பிறவார் பெரிதின்பமுற்றே.

(பா.116)

## வருமுன் காப்போம்

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்;
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?

சுத்தம் உள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீயதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே!

காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே!

**- கவிமணி தேசிக விநாயகனார்**

## கல்வி அழகே அழகு

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் - முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக்கு அழகுசெய் வார்.

**- குமரகுருபரர்**

## பாடறிந்து ஒழுகுதல்

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை
அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை
நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ஓடாது உயிர் வௌவல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்

**- நல்லந்துவனார்**

## திருக்குறள்

**தெரிந்து வினையாடல்**

1. இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து
   அதனை அவன்கண் விடல்.

**சொல்வன்மை**

2. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
   வேட்ப மொழிவதாம் சொல்.
3. சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
   வெல்லும்சொல் இன்மை அறிந்து.

**- திருவள்ளுவர்**

## படை வேழம்

வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி
மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்
இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்
இருவர் ஒருவழி போகல் இன்றியே

ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்
உடலின் நிழலினை வெருவி அஞ்சினர்
அருவர் வருவர் எனா இறைஞ்சினர்
அபயம் அபயம் எனநடுங்கியே.

**- செயங்கொண்டார்**

## ஒன்றே குலம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே

படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே

- திருமூலர்

## திருக்குறள்

**படைச்செருக்கு**

1. கான முயல்எய்த அம்பினில் யானை
   பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

**நட்பு**


2. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
   பண்புடை யாளர் தொடர்பு.

**பண்புடைமை**

3. பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்
   மண்புக்கு மாய்வது மன்.

**- திருவள்ளுவர்**

# இயல் ஒன்று தமிழ் இன்பம்



## கற்றல் நோக்கங்கள்

- செய்யுளைப் படித்து அதன் நயங்களைப் போற்றும் திறன் பெறுதல்
- தமிழ்மொழியின் மரபுகளை அறிந்து பயன்படுத்துதல்
- தமிழ் எழுத்துகளின் வளர்ச்சி நிலைகளை அறிதல்
- ஓரெழுத்து ஒரு மொழியை அடிப்படையாகக் கொண்டு சொல்லாட்சித் திறனை வளர்த்தல்
- சொற்களின் பிறப்பு முறைகளை அறிந்து உரிய முறையில் ஒலித்தல்

இயல் ஒன்று

கவிதைப்பேழை

# தமிழ்மொழி வாழ்த்து

ZPUXW

**நோக்கம்**

- மொழி ஒரு நாட்டின் சிறப்பு என்பதை உணர்தல்
- தமிழின் பெருமையை உணர்ந்து போற்றுதல்
- மொழியை நேசித்த கவிஞர்களைப் பற்றி அறிதல்

## நூல் வெளி



கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர் **சி.சுப்பிரமணிய பாரதியார். இந்தியா, விஜயா** முதலான இதழ்களை நடத்தி விடுதலைப் போருக்கு வித்திட்டவர். கவிதைகள் மட்டுமின்றி, **சந்திரிகையின் கதை, தராசு** உள்ளிட்ட உரைநடை நூல்களையும் வசனகவிதைகளையும் சீட்டுக்கவிகளையும் எழுதியவர். **சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன்** என்றெல்லாம் **பாரதிதாசன்** இவரைப் புகழ்ந்துள்ளார்.

இப்பாடல் **பாரதியார் கவிதைகள்** என்னும் தொகுப்பில் **தமிழ்மொழி வாழ்த்து** என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

## சொல்லும் பொருளும்

1. நிரந்தரம் - நிலையாக, என்றும் அழியாமல், காலம் முழுமையும்
2. வைப்பு - நிலப்பகுதி
3. சூழ்கலி - சூழ்ந்துள்ள அறியாமை இருள்
4. வண்மொழி - வளமிக்கமொழி
5. இசை - புகழ்
6. தொல்லை - பழமை, துன்பம்
7. தன்மணம் - தன்வாசனை
8. கலி - இருள், அறியாமை
9. துலங்குக - மேன்மையடைக
10. வளர்மொழி - வளர்ந்து கொண்டிருக்கும் மொழி

## மதிப்பீடு (பக்கம்.4)

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ..................**

அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி **[அ) வைப்பு]**

2. **'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................**

அ) என் + றென்றும் ஆ) என்று + என்றும் இ) என்றும் + என்றும் ஈ) என் + என்றும் **[ஆ) என்று + என்றும்]**

3. **'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................**

அ) வான + மளந்தது ஆ) வான் + அளந்தது

இ) வானம் + அளந்தது ஈ) வான் + மளந்தது **[இ) வானம் + அளந்தது]**

4. **அறிந்தது + அனைத்தும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..................**

அ) அறிந்ததுஅனைத்தும் ஆ) அறிந்தனைத்தும்

இ) அறிந்ததனைத்தும் ஈ) அறிந்துனைத்தும் **[இ) அறிந்ததனைத்தும்]**

5. **வானம் + அறிந்த என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..................**

அ) வானம்அறிந்து ஆ) வான்அறிந்த இ) வானமறிந்த ஈ) வான்மறிந்த **[இ) வானமறிந்த]**

## தமிழ்மொழி வாழ்த்து - இப்பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.

**(ஒவ்வொரு அடியின் முதல்சொல்லின் முதல் எழுத்து ஒன்றுபோல் வருவது மோனை ஆகும்).**

வாழ்க - வாழிய

வானம் - வண்மொழி

எங்கள் - என்றென்றும்

வாழ்க - வாழ்க

வானம் - வளர்

## குறுவினா

1. **தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?**

   - ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தமிழ்மொழி புகழ் கொண்டு வாழ்கிறது.

2. **தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?**

   - தமிழ்மொழியானது வானம்வரை உள்ளடங்கியுள்ள பொருண்மைகளை (பொருள்களின் தன்மை, கருத்து) எல்லாம் அறிந்து வளர்கிறது.

## சிறுவினா

1. **தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.**

   - தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று நிற்க வேண்டும். அதனாலும்
   - ஆகாயத்தால் சூழப்பட்ட இவ்வுலகத்தை அறிந்து உரைக்கும் வளமானமொழி தமிழ்மொழி. அதனாலும்
   - ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழால் நிரம்பி நிற்கும் மொழி தமிழ்மொழி. அதனாலும்
   - எல்லாவற்றிற்கும் மேலாக எங்கள் தாய்மொழி தமிழ்மொழி. அதனாலும் உலகம் உள்ளவரை தமிழ்மொழி வாழ்தல் வேண்டும் என்று பாரதியார் வாழ்த்துகிறார்.

## சிந்தனை வினா

1. **பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?**
   - தமிழ்மொழி உலகத்தில் உள்ள அனைத்து கருத்துகளையும் அறிந்து உரைப்பதாலும்
   - அண்டவெளியில் உள்ள அனைத்து தன்மைகளையும் அறிந்து தெரிவிப்பதாலும்
   - உலகம் முழுவதும் இலக்கிய வளத்தைப் பரவச்செய்து புகழ்கொண்டிருப்பதாலும்
   - அறியாமை இருளை நீக்கி, ஒளிமிக்க பாரதத்தை உருவாக்கியதாலும்
   - இன்றளவும் எண்ணற்ற இலக்கியங்களால் நாள்தோறும் பூத்துக்குலுங்கும் அழகிய மொழி சோலையாய் திகழ்பவள் நம் தமிழ்அன்னை. ஆகையால் அன்னையாகிய என் தமிழ்மொழி என்றென்றும் வளமான (வண்) மொழி என்று பாரதியார் அழைக்கிறார்.

---

## கற்பவை கற்றபின் (பக்கம்.3)

1. **'தமிழ்மொழி வாழ்த்து' - பாடலை இசையுடன் பாடி மகிழ்க.**

2. **படித்துச் சுவைக்க.**

**செந்தமிழ் அந்தாதி**

செந்தமிழே! செங்கரும்பே! செந்தமிழர் சீர்காக்கும்
நந்தா விளக்கனைய நாயகியே! - முந்தை
மொழிக்கெல்லாம் மூத்தவளே! மூவேந்தர் அன்பே!
எழில்மகவே! எந்தம் உயிர்
உயிரும்நீ; மெய்யும் நீ; ஓங்கும் அறமாம்
பயிரும்நீ; இன்பம்நீ; அன்புத் தருவும்நீ;
வீரம்நீ; காதல்நீ; ஈசன் அடிக்குநல்
ஆரம்நீ; யாவும்நீ யே!

**- து. அரங்கன்**

---

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. வானம் அளந்தது அனைத்தும் அளந்திடு ______ வாழியவே. **(வண்மொழி)**
2. ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ்க்கொண்ட ______ வாழ்க! **(தமிழ்மொழி)**
3. இந்தியா மற்றும்______ இதழினை சி.சுப்பிரமணிய பாரதியார் நடத்தி வந்தார். **(விஜயா)**
4. பாரதியார் எழுதிய உரைநடை நூல் ______ ஆகும். **(தராசு)**
5. ''செந்தமிழ்த் தேனீ'' என்று அழைக்கப்படுபவர் ______. **(பாரதியார்)**

## ஓரிரு வரிகளில் விடையளி

1. **ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி**
   **இசைகொண்டு வாழியவே! - இப்பாடலைப்பாடியவர் யார்?**
   - இப்பாடலைப் பாடியவர் பாரதியார்.

2. **வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி**
   **வாழிய வாழியவே! -- இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?**
   - பாரதியார் கவிதைகள் என்னும் நூல் தொகுப்பில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது.

3. **வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி**
   **வாழிய வாழியவே! -- இப்பாடல் வரிகள் எந்த தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளது?**
   - இப்பாடல் வரிகள் ‘‘தமிழ்மொழி வாழ்த்து’’ என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

4. **பாரதியாரை சிந்துக்குத் தந்தை என்று புகழ்ந்தவர் யார்?**
   - பாரதியாரை சிந்துக்குத் தந்தை என்று புகழ்ந்தவர் பாரதிதாசன் ஆவார்.

5. **பாரதிதாசன் பாரதியாரை எவ்வாறெல்லாம் புகழ்ந்துரைக்கிறார்?**
   - சிந்துக்குத்தந்தை
   - செந்தமிழ்த் தேனீ
   - புதிய அறம்பாட வந்த அறிஞன்
   - மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் புகழ்ந்துரைக்கிறார்.

6. **பாரதியாரின் இயற்பெயர் என்ன?**
   - பாரதியாரின் இயற்பெயர் சி.சுப்பிரமணியன் ஆகும்.

7. **விடுதலைப் போருக்காக சி.சுப்பிரமணிய பாரதியார் நடத்திய இதழ்களை குறிப்பிடுக.**
   - இந்தியா, விஜயா ஆகியவை விடுதலைப் போருக்காக சி.சுப்பிரமணிய பாரதியார் நடத்திய இதழ்களாகும்.

## சிறுவினா

1. **சி.சுப்பிரமணிய பாரதியார் - குறிப்பு வரைக.**

| | |
|---|---|
| **இயற்பெயர்** | : சி.சுப்பிரமணியன் |
| **பெற்றோர்** | : சின்னசாமி, இலக்குமியம்மையார் |
| **ஊர்** | : எட்டயபுரம் |
| **பன்முக ஆற்றல்** | : கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர் |
| **நடத்திய இதழ்கள்** | : இந்தியா, விஜயா |
| **எழுதிய உரைநடை நூல்கள்** | : சந்திரிகையின் கதை, தராசு |
| **புகழாரம்** | : சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த்தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் |

கவிதைப்பேழை

இயல் ஒன்று


# தமிழ்மொழி மரபு

Z6WRJ

| நோக்கம் | |
|---|---|
| | ➢ தமிழ்மொழியின் மரபுகளை அறிதல்<br>➢ மொழியின் மரபு பற்றி கூறும் இலக்கணங்களைப் புரிந்து கொள்ளுதல்<br>➢ பழைய இலக்கணநூலான தொல்காப்பியம் குறித்து தெரிந்து கொள்ளுதல்<br>➢ மரபினை பின்பற்றுவதின் அவசியத்தைத் தெளிதல். |

## நூல் வெளி

தொல்காப்பியத்தின் ஆசிரியர் **தொல்காப்பியர்.** தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் **தொல்காப்பியம்** ஆகும். இந்நூல் **எழுத்து, சொல், பொருள்** என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் **ஒன்பது இயல்களைக்** கொண்டது. பொருளதிகாரத்தின் **மரபியலில்** உள்ள மூன்று நூற்பாக்கள் (91, 92, 93) இங்குத் தரப்பட்டுள்ளன.



## சொல்லும் பொருளும்

1. விசும்பு - வானம்
2. வளி - காற்று
3. தீ - நெருப்பு
4. மயக்கம் - கலவை
5. இருதிணை - உயர்திணை, அஃறிணை
6. வழாஅமை - தவறாமை
7. ஐம்பால் - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்
8. மரபு - வழக்கம்
9. திரிதல் - மாறுபடுதல்
10. செய்யுள் - பாட்டு
11. தழாஅல் - தழுவுதல் (பயன்படுத்துதல்)

## மதிப்பீடு (பக்கம்.7)

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **பறவைகள் .................. பறந்து செல்கின்றன.**

அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில் ஈ) நீரில் **[ஆ) விசும்பில்]**

2. **இயற்கையைப் போற்றுதல் தமிழர் ..................**

அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு **[அ) மரபு]**

3. **'இருதிணை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................**

அ) இரண்டு + திணை ஆ) இரு + திணை இ) இருவர் + திணை ஈ) இருந்து + திணை

**[அ) இரண்டு + திணை]**

4. **'ஐம்பால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................**

அ) ஐம் + பால் ஆ) ஐந்து + பால் இ) ஐம்பது + பால் ஈ) ஐ + பால் **[ஆ) ஐந்து + பால்]**

## குறுவினா

1. **உலகம் எவற்றால் ஆனது?**

- நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்தும் கலந்த கலவையால் ஆனது உலகம் ஆகும்.

2. **செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?**

- செய்யுளில் மரபுகளை மாற்றினால் பாடலின் பொருள் மாறிவிடும். அதனால் செய்யுள் மரபுகளை மாற்றக்கூடாது.

## சிந்தனை வினா

1. **நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

- ஒழுங்குமுறை என்பது வாழ்விற்குக் கட்டாயம் வேண்டும். ஒழுங்குமுறை மாறினால் எல்லாமே மாறிவிடும்.
- நாம் உண்ணும் உணவிலிருந்து, உடுத்தும் உடை வரை ஒழுங்குமுறை ஒன்று கட்டாயம் கடைபிடித்தல் அவசியமாகும்.
- இல்லையென்றால் உடல்நோய்க்கும், மன நோய்க்கும் ஆளாகுவோம்.
- எனவே நம் முன்னோர்கள் நம் இயற்கைக்குத் தகுந்தபடி மரபுநிலை மாறாமல் ஒழுங்குமுறைகளை வாழ்வில் பின்பற்றி வந்தார்கள்.
- நாமும் முன்னோர் நெறிப்படி வாழ்வோமாக.

## தெரிந்து தெளிவோம் (பக்கம்.6)

| இளமைப் பெயர்கள் | | | ஒலி மரபு | | |
|---|---|---|---|---|---|
| **புலி** | - | பறழ் | **புலி** | - | உறுமும் |
| **சிங்கம்** | - | குருளை | **சிங்கம்** | - | முழங்கும் |
| **யானை** | - | கன்று | **யானை** | - | பிளிறும் |
| **பசு** | - | கன்று | **பசு** | - | கதறும் |
| **ஆடு** | - | குட்டி | **ஆடு** | - | கத்தும் |

## கற்பவை கற்றபின் (பக்கம்.7)

1. **பறவைகளின் ஒலி மரபுகளை எழுதி வருக.**
   **எ.கா. காகம் கரையும்.**





| | | |
|---|---|---|
| ➢ ஆந்தை அலறும் | ➢ கூகை குழறும் | ➢ புறா குனுகும் |
| ➢ கிளி பேசும் | ➢ கோழி கொக்கரிக்கும் | ➢ மயில் அகவும் |
| ➢ குயில் கூவும் | ➢ சேவல் கூவும் | ➢ வண்டு முரலும் |

2. **ஐம்பூதங்கள் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்படும் வேறு பெயர்களை எழுதுக.**

- ➢ நிலம் - தரை, மண், இடம், பூவுலகு, பூமி, மனை, புவி
- ➢ அக்கினி - கொள்ளி, தீ, கனல், அனல், நெருப்பு
- ➢ நீர் - தண்ணீர், வெள்ளம், புனல்
- ➢ காற்று - வளி, வாயு, புயல், தென்றல்
- ➢ ஆகாயம் - வானம், விண், விசும்பு

3. **ஐம்பூதங்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.**




| நிலம் | தீ |
|---|---|
| நிலத்தின் மறுபெயர் வயலாகும்!<br>நெல் நிலத்தில் பயிராகும்!<br>குறிஞ்சி முல்லை மருதம்<br>நெய்தல் பாலை இவையாவும்<br>நிலமாகும்!  | ஐம் பூதத்தில் ஒன்று தீயாகும்!<br>தரைத்தீ, பரவுத்தீ, காட்டுத் தீ<br>என தீ மூன்றாகும்! நெருப்பு<br>இதன் மறுபெயராகும்!  |
| **நீர்** | **காற்று** |
| நீர்மையுள்ள பொருளே நீராகும்!<br>உயிர்வளி நீர்வளை கொண்ட<br>கலவையாகும்! தண்ணீர்<br>வெந்நீர், பதநீர், இளநீர் என<br>இதன் பொருள் விரியுமே!  | வளிகளின் சேர்க்கை காற்றாகும்!<br>இதுவே உயிரினங்களின்<br>உயிர்மூச்சாகும்!<br>தென்றல் காற்று!<br>சூறைக்காற்று!<br>எனப் பலபெயரில் வலம் வருமே!  |
| **வானம்** | |
| வானம் விண்ணாகுமே! இதில்<br>ஏழு வண்ணம் வானவில்லாக<br>இப் புவியில் தெரியுமே!  | SamacheerKalvi.Guide |

# கூடுதல் வினாக்கள்

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **செய்யுளுக்கும் மரபுக்கும் உள்ள தொடரமைப்பைப் பற்றிக் கூறும் நூல் ..................**

   அ) நன்னூல் ஆ) திருக்குறள் இ) தொல்காப்பியம் ஈ) கம்பராமாயணம்

   **[இ) தொல்காப்பியம்]**

2. **தொல்காப்பிய நூலின் ஆசிரியர் யார்?**

   அ) பவணந்தியார் ஆ) திருவள்ளுவர் இ) தொல்காப்பியர் ஈ) கம்பர் **[இ) தொல்காப்பியர்]**

3. **தொல்காப்பியம் எத்தகைய நூல்?**

   அ) இலக்கண நூல் ஆ) கவிதை நூல் இ) கதை நூல் ஈ) உரைநடை நூல் **[அ) இலக்கண நூல்]**

4. **தொல்காப்பியத்தில் உள்ள மொத்த அதிகாரங்களின் எண்ணிக்கை ................**

   அ) 4 ஆ) 9 இ) 3 ஈ) 5 **[இ) 3]**

5. **தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை ................**

   அ) 27 ஆ) 9 இ) 91 ஈ) 3 **[அ) 27]**

6. **நம் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள தொல்காப்பிய நூற்பா எந்த இயலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது?**

   அ) செய்யுளியல் ஆ) தொடரியல் இ) வினையியல் ஈ) மரபியல் **[ஈ) மரபியல்]**

7. **பால் எத்தனை வகைப்படும்?**

   அ) மூன்று ஆ) ஐந்து இ) இரண்டு ஈ) ஏழு **[ஆ) ஐந்து]**

8. **திணை எத்தனை வகைப்படும்?**

   அ) மூன்று ஆ) ஐந்து இ) இரண்டு ஈ) ஏழு **[இ) இரண்டு]**

## ஓரிரு வரிகளில் விடையளி

1. **ஒழுக்கம் என்றால் என்ன?**
   - வாழ்வுக்குரிய ஒழுங்குமுறை ஒழுக்கம் எனப்படும்.

2. **மொழி மரபு என்றால் என்ன?**
   - மொழிக்குரிய ஒழுங்குமுறை மொழிமரபு எனப்படும்.

3. **உயிரளபெடை என்றால் என்ன?**
   - உயிர் எழுத்து நீண்டு ஒலிப்பதை உயிரளபெடை என்பர்.

**4. இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்**

**திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும் - இவ்வரிகளில் இடம்பெற்றுள்ள அளபெடை சொற்களை எடுத்தெழுதுக.**

- வழாஅமை, தழாஅல்.

---

**5. ஐம்பூதம் எவை எவை?**

- நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியவை ஐம்பூதங்களாகும்.

---

**6. ஐந்திணை எவை எவை?**

- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவை ஐந்திணைகளாகும்.

---

**7. இருதிணைகள் எவை?**

- உயர்திணை, அஃறிணை ஆகியவை இருதிணைகளாகும்.

---

**8. பிழையான மரபுத்தொடரைத் திருத்தி எழுதுக.**

- புலி குட்டியைப் பார்த்து, யானை கத்தியது.

  புலி **பறழைப்** பார்த்து, யானை **பிளிறியது.**

- புலி முழங்க பசு கத்தியது.

  புலி **உறும** பசு **கதறியது.**

---

**9. தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள அதிகாரங்கள் எத்தனை? அவை யாவை?**

- தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள அதிகாரங்கள் மூன்று. அவை 1. எழுத்து, 2. சொல், 3.பொருள்.

---

**10. தொல்காப்பியத்தில் உள்ள ஒவ்வொரு அதிகாரங்களிலும் எத்தனை இயல்கள் அமைந்துள்ளன?**

- ஒவ்வொரு அதிகாரங்களிலும் ஒன்பது இயல்கள் அமைந்துள்ளன. ஆக, மூன்று அதிகாரங்களில் 27 இயல்கள் இடம்பெற்றுள்ளன.

---

உரைநடை உலகம்

# இயல் ஒன்று

# தமிழ் வரிவடிவ வளர்ச்சி

5JA03

| நோக்கம் | |
|---|---|
| | ➢ தமிழ் எழுத்துகளின் வளர்ச்சி நிலைகளை அறிதல்<br>➢ தமிழ் எழுத்துகளின் வளர்ச்சி நிலையும் எழுத்துகளின் உருமாற்றத்தையும் புரிந்துகொள்ளுதல்<br>➢ தமிழ் எழுத்துகளின் சீர்திருத்தம் குறித்து உணருதல். |

## மதிப்பீடு (பக்கம்.12)

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப்பெற .................. காரணமாக அமைந்தது.**
   அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை **[அ) ஓவியக்கலை]**

2. **வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து .................. என அழைக்கப்படுகிறது.**
   அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து **[ஆ) வட்டெழுத்து]**

3. **தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ..................**
   அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்
   **[ஆ) தந்தை பெரியார்]**

### கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் .................. என அழைக்கப்பட்டன. **(கண்ணெழுத்துகள்)**
2. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் .................. **(வீரமாமுனிவர்)**

### குறுவினா

1. **ஓவிய எழுத்து என்றால் என்ன?**
   ➢ தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரிவடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.

2. **ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?**
   ➢ ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்.

3. **ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?**

- ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதும்பொழுது நேர்கோடுகள், புள்ளிகள் இட்டு எழுதினால் ஓலைச்சுவடி கிழிந்துவிடும் என்ற காரணத்தால் வளைகோடுகளைப் பயன்படுத்தி எழுதினர்.

4. **வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.**

- எகர ஒகர எழுத்துகளில் நெடில் எழுத்திற்கு புள்ளியிட்டு எழுதினர். இப்புள்ளியைக் களைந்து மாற்றம் ஏற்படுத்தியவர் வீரமாமுனிவர்.
- 'எ' என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு 'ஏ' என்னும் எழுத்தை நெடிலாக குறிப்பிட்டு மாற்றம் ஏற்படுத்தினார்.
- ஒ என்னும் எழுத்திற்குச் சுழி இட்டு ஓ என்னும் நெடில் எழுத்தாக மாற்றம் ஏற்படுத்தினார்.

## சிறுவினா

1. **எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.**

- ஓலைச் சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.
- ஓலைச் சுவடிகளில் நிறுத்தற்குறிகளும் பத்தி பிரித்தலும் கிடையாது.
- புள்ளி இடப்பட வேண்டிய எழுத்துகள் புள்ளி இடம்பெறாமல் இருந்தால் படிப்பவர், மெய்யா? உயிர்மெய்யா? குறிலா? நெடிலா? என உணருவதில் கடினம்.
- இதனால் படிப்பவருக்குப் பொருள் விளங்கிக்கொள்ள இயலவில்லை.
- எனவே எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.

2. **தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.**

| பழைய வடிவம் | புதிய வடிவம் |
|---|---|
| ˙எ | ஏ |
| க. | கா |
| ..க | கை |
| கெ.. | கௌ |
| ப் | ம |

## நெடுவினா

1. **எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.**

- மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும் பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினான்.
- அதற்காகப் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.
- தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளில் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.
- அடுத்ததாக ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது. அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் ஓசையைக் குறிப்பதாயிற்று.
- இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்.
- கல்வெட்டுகள், செப்பேடுகளில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிப்பர்.

- அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.
- இதுவே எழுத்துகளின் தோற்றம் ஆகும்.

## சிந்தனை வினா

1. **தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.**
   - சைகை மொழி, வரிவடிவமாக, ஒலிவடிவமாக பலரது கடின உழைப்பால் தலைசிறந்த மொழியாக நிற்கிறது.
   - மொழியால் இலக்கியங்கள் பெருகி, உலக அளவில் நாம் புகழ் அடைந்து நிற்கிறோம்.
   - இத்தகைய அருமைமிகு நம் தாய்மொழியைக் கண்ணெனக் காத்து போற்றி வருதல் அவசியமாகும்.
   - பிறமொழிக்குத் தரும் முக்கியத்தைப் புறந்தள்ளி, அனைத்து இடங்களிலும் தமிழ்மொழியைக் கையாண்டு மொழி மேலும் சிறக்க உறுதுணையாக இருப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

2. **தமிழை உரோமன் எழுத்துருவில் எழுதுவதால் தமிழுக்கு ஏற்படும் தீங்குகள் குறித்து கலந்துரையாடுக.**
   - சிவா : தமிழ்மொழியின் பெருமையைப்பற்றி பேசுகிறாயே! எண்களுக்கு அதாவது ஒன்று, இரண்டிற்கு எழுத்துருக்கள் உண்டா?
   - சக்தி : எண்களுக்கும் தமிழ்மொழியில் உருக்கள் உண்டு. எப்படி 1, 2, 3.. என உரோமன் எழுத்துகள் உண்டோ அதுபோல தமிழிலும் எண்களுக்கான எழுத்துருவரிசைகள் உண்டு.
   - சிவா : ஒவ்வொரு எண்ணிற்கும் உரோமன் எழுத்தில் தான் எழுதுதல் வேண்டும். தமிழில் எண்கள் இல்லை என நான் தவறாக கருதிவிட்டேன்.
   - சக்தி : நீ மட்டுமல்ல தமிழ் அறிந்த பலரும் எண்களுக்கு எழுத்தில்லை என்று தவறாகப் புரிந்துக்கொண்டு, நம் தமிழின் சிறப்பை மறந்துவிடுகின்றனர். ஒன்றுக்கு ‘க’ என்றும் இரண்டிற்கு ‘உ’ என்றும் எழுத்து வடிவம் உண்டு.
   - சிவா : நீ சொல்வது சரிதான். இதை மறந்து அனைவரும் உரோமன் எழுத்துருவைப் பயன்படுத்தினால், காலப்போக்கில் தமிழ் எண் எழுத்து மறைந்துவிடக்கூடும். மறந்துவிடக்கூடும்.
   - சக்தி : ஆம் சிவா! எனவே நாம் அனைவரும் முடிந்தவரை எண்களுக்குரிய தமிழ் வரிவடித்தை எழுதப் பழகுவோம். தமிழ்மொழியைப் போற்றுவோம்.

## தெரிந்து தெளிவோம் (பக்கம்.9)

**கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளின் அமைப்பு**

1. ‘ஸ’ எனும் வடமொழி எழுத்து காணப்படுகிறது.
2. மெய்யைக் குறிக்கப் புள்ளி பயன்படுத்தவில்லை.
3. எகர, ஒகரக் குறில் நெடில் வேறுபாடில்லை.

தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துகள் வழக்கிலிருந்தன என அறிகிறோம். அரச்சலூர் கல்வெட்டே இதற்குச் சான்றாகும். இக்கல்வெட்டில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளன.

## பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் (பக்கம்.11)

| வ.எண். | பழைய வடிவம் | சீர்திருத்த வடிவம் | சான்று |
|---|---|---|---|
| 1. | ண | ணா | அண்ண - அண்ணா |
| 2. | ணே | ணை | அணே - அணை |
| 3. | ெண | ணொ | மண்ெணடு - மண்ணொடு |
| 4. | ேண | ணோ | கண்ேணடு - கண்ணோடு |
| 5. | லே | லை | தலே - தலை |
| 6. | ளே | ளை | களே - களை |
| 7. | ரு | றா | சிருர் - சிறார் |
| 8. | ெரு | றொ | மற்ெருரு - மற்றொரு |
| 9. | ேரு | றோ | காற்ேருடு - காற்றோடு |
| 10. | ன | னா | மன்ன - மன்னா |
| 11. | னே | னை | வினே - வினை |
| 12. | ென | னொ | என்ெனடு - என்னொடு |
| 13. | ேன | னோ | என்ேனடு - என்னோடு |

## வீரமாமுனிவரின் எழுத்துச் சீர்திருத்தம் (பக்கம்.11)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ˙எ | எ | ˙ஒ | ஒ | கெ் | கெ | கெ்ா | கொ |
| எ | ஏ | ஒ | ஓ | கெ | கே | கொ | கோ |

## கற்பவை கற்றபின் (பக்கம்.11)

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து, அதில் இடம்பெற்றுள்ள பழைய வரிவடிவச் சொற்களை எடுத்து எழுதி, அவற்றை இன்றைய வரிவடிவில் மாற்றி எழுதுக.**

சுற்றுப்புறச் சூழ்நிலேப் பிரச்சனேகள் பற்றிய இந்தியாவின் கவலே பல்லாண்டு காலமாக வளர்ந்தே வருகிறது.

'மனிதன் ஏழ்மையிலே இருக்கும்போது சத்தற்ற உணவினுலும், நோயினுலும் அச்சுறுத்தப்படுகிருன். பலவீனனுக இருப்பவன் போருக்கு அஞ்சுகிறான்; செல்வந்தனுக இருப்பவனே தன் கொழுத்த செல்வத்தால் உண்டான அசுத்தத்திற்கு அஞ்சுகிருன்' என்றெல்லாம் திருமதி இந்திராகாந்தி அன்றைக்கு ஆற்றிய உரை நாம் நினேவு கூரத்தக்கது.

1. **சூழ்நிலே** - சூழ்நிலை
2. **பிரச்னேகள்** - பிரச்சனைகள்
3. **கவலே** - கவலை
4. **உணவினுலும்** - உணவினாலும்
5. **நோயினுலும்** - நோயினாலும்
6. **அச்சுறுத்தப்படுகிருன்** - அச்சுறுத்தப்படுகிறான்
7. **பலவீனனுக** - பலவீனனாக
8. **அஞ்சுகிருன்** - அஞ்சுகிறான்
9. **செல்வந்தனுக** - செல்வந்தனாக
10. **இருப்பவனே** - இருப்பவனோ
11. **அஞ்சுகிருன்** - அஞ்சுகிறான்
12. **நினேவு** - நினைவு

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. மனிதன் தன் .......... பிறருக்கு அறிவிக்க மொழியைக் கண்டுபிடித்தான். **(கருத்தைப்)**
2. எழுத்துகளின் .......... வடிவங்கள் மொழிக்கு மொழி வேறுபடுகின்றன. **(வரி)**
3. தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை .......... என்பர். **(ஓவிய எழுத்து)**
4. கல்வெட்டுகள் .......... நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. **(கி.மு. (பொ.ஆ.மு.) 3)**
5. செப்பேடுகள் .......... நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. **(கி.மு. (பொ.ஆ.மு) 7)**
6. கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் .......... என்று அழைக்கப்படுகின்றன. **(கண்ணெழுத்துகள்)**
7. பாறைகளில் எழுத .......... கோடுகள் பயன்படுத்தப்பட்டன. **(நேர்க்)**
8. ஓலைகளில் எழுத .......... கோடுகள் பயன்படுத்தப்பட்டன. **(வளை)**
9. க. இவ்வாறு எழுதினால் அது .......... **(கா நெடிலாகும்)**
10. ஐகார எழுத்துகளைக் குறிப்பிட எழுத்துகளின் முன் .......... புள்ளிகள் இட்டனர். **(இரட்டைப்)**
11. மகர எழுத்தைக் குறிப்பிட, பகர எழுத்தின் .......... புள்ளி இட்டனர். **(உள்ளே)**
12. எகர வரிசை எழுத்திற்குப் பின்னால் இரண்டு புள்ளிகள் இட்டால் அவை .......... வரிசை எழுத்துகளாகக் கருதப்படும். **(ஔகார)**
13. தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் .......... ஆவார். **(வீரமாமுனிவர்)**
14. இருபதாம் நூற்றாண்டில் எழுத்துச் சீர்திருத்தம் கொண்டுவந்தவர் .......... ஆவார். **(பெரியார்)**

## ஓரிரு வரிகளில் விடையளி

1. **தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களை எங்கெல்லாம் காணலாம்?**
   - கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும், செப்பேடுகளிலும் தமிழ் எழுத்துகளின் பழைய வரிவடிவங்களைக் காணலாம்.
2. **கல்வெட்டு மற்றும் செப்பேடுகளில் காணப்படும் வரி வடிவ எழுத்துகளை என்னவென்று பிரிப்பர்?**
   - கல்வெட்டு மற்றும் செப்பேடுகளில் காணப்படும் வரி வடிவ எழுத்துகளை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிப்பர்.
3. **வட்டெழுத்து என்பது யாது?**
   - வட்டெழுத்து என்பது வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும்.
4. **வட்டெழுத்துகள் எங்கு இடம்பெற்றுள்ளன?**
   - எட்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டுவரை சேர மற்றும் பாண்டியர்களின் சாசனங்களில் வட்டெழுத்துகள் இடம்பெற்றுள்ளன.
5. **பழைய தமிழெழுத்துகள் எந்த நூற்றாண்டு முதல் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன?**
   - பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துகள் காணப்படுகின்றன.
6. **பழங்காலத்தில் எவற்றில் எழுதினர்?**
   - பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை இவற்றில் எழுதினர்.

விரிவானம்

# இயல் ஒன்று

# சொற்பூங்கா

3R9GH

## நோக்கம்

- ஓரெழுத்து ஒரு மொழியை அடிப்படையாகக் கொண்டு சொல்லாட்சித் திறனை வளர்த்தல்.
- ஓரெழுத்து ஒரு மொழியைத் தெளிவாக கற்றல்.
- தமிழின் சொல்லாட்சியைக் கண்டு வியத்தல்.

## நூல் வெளி

**செந்தமிழ் அந்தணர்** என்று அழைக்கப்படும் **இரா.இளங்குமரனார்** பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர். நூலாசிரியர், இதழாசிரியர், உரையாசிரியர், தொகுப்பாசிரியர் எனப் பன்முகத் திறன் பெற்றவர். **இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம்** உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். **தேவநேயம்** என்னும் நூலைத் தொகுத்துள்ளார். திருச்சிக்கு அருகில் அல்லூரில் **திருவள்ளுவர் தவச்சாலையும், பாவாணர் நூலகமும்** அமைத்துள்ளார்.

இவரது **தமிழின் தனிப்பெருஞ் சிறப்புகள்** என்னும் நூலிலிருந்து செய்திகள் தொகுத்து இங்குத் தரப்பட்டுள்ளன.

## மதிப்பீடு (பக்கம்.16)

**தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

- தமிழில் ஓரெழுத்து ஒருமொழி மொத்தம் 42 எழுத்துகள்
- அதில் உயிர் வரிசையில் ஆறு எழுத்துகளும், ம வரிசையில் ஆறு எழுத்துகளும், த, ப, ந வரிசைகளில் ஐந்து ஐந்து எழுத்துகளும் (15) க,ச, வ என்னும் வரிசைகளில் நான்கு நான்கு எழுத்துகளும் (12) ய வரிசையில் ஒன்றும் இவை நெடில்கள் ஓரெழுத்து ஒருமொழி நாற்பது.
- நொ, து குறிலைச் சேர்த்து 42 எழுத்துகள்.
- பூ, கா இரண்டும் ஓரெழுத்து ஒருமொழி. இரண்டும் சேர்ந்து ‘பூங்கா’ என்னும் கலைச்சொல் உருவாகியது.
- மா என்பது ‘பெரிய’ என்றும் ‘விலங்கு’ என்றும் பொருள் தரும் ஓரெழுத்து ஒருமொழி ஆகும்.
  **எ.கா.**மாநாடு, மாநகரம், அரிமா, பரிமா, ஆமா

- 'ஈ' பொதுப்பெயர் ஓயாது ஒலி செய்யும் ஒலிக்குறிப்பைக் காட்டினாலும், மாட்டு ஈ, தேன் ஈ என பகுக்கப்படுகிறது. கொடுத்தலை 'ஈக' என்றும் சொல்வதுண்டு.
- போ, வா, நீ, சூ, சே, சை, சோ இவை போன்றவை இக்கால வழக்கில் பெரிதும் பயன்படுத்தும் ஓரெழுத்து ஒருமொழியாகும்.
- 'ஆன்' 'ஆ' என மாறியது, 'மான்' 'மா' என மாறியது. 'கோன்' 'கோ' என மாறியது பற்றி நாம் அனைவரும் நன்கு அறிவோம்.
- ஏ என்பதற்கு எய்தல் என்று பொருள். அதிலிருந்தே ஏகலை, ஏவலன், எயினர், எயினியர் என்னும் சொற்கள் உருவாகி நின்றன.
- இவ்வாறு ஓரெழுத்து ஒருமொழி திரிந்தும், வளர்ந்தும், புணர்ந்தும், தனித்தும் இன்றளவும் வழக்கத்தில் உள்ளதை இளங்குமரனார் விளக்கமாக இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## தெரிந்து தெளிவோம் (பக்கம்.14)

**ஓரெழுத்து ஒருமொழிகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உயிர் எழுத்து | - | ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ | ககர வரிசை | - | கா, கூ, கை, கோ |
| மகர வரிசை | - | மா, மீ, மு, மே, மை, மோ | சகர வரிசை | - | சா, சீ, சே, சோ |
| தகர வரிசை | - | தா, தீ, தூ, தே, தை | வகர வரிசை | - | வா, வீ, வை, வெள |
| பகர வரிசை | - | பா, பூ, பே, பை, போ | யகர வரிசை | - | யா |
| நகர வரிசை | - | நா, நீ, நே, நை, நோ | குறில் எழுத்து | - | நொ, து |

## கற்பவை கற்றபின் (பக்கம்.16)

1. **ஓரெழுத்து ஒரு மொழிகள் இடம் பெறுமாறு ஐந்து தொடர்கள் எழுதுக.**

- கனமான பொருளைக் கீழே **வை**
- நாளைக்குச் சீக்கிரம் **போ**
- எனக்குப் புத்தகம் **தா**
- பொங்கல் பண்டிகை கொண்டாடும் மாதம் **தை**
- எங்கள் செடியில் பூத்த **பூ** ரோஜா

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. காட்டுப் பசுவுக்கு ................ என்று பெயர். **(ஆமா)**
2. முள்ளம்பன்றியில் பழம் பெயர் ................ **(எய்ப்பன்றி)**
3. செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படுபவர் ................ **(இரா.இளங்குமரனார்)**

4. இரா.இளங்குமரனார் தொகுத்த நூலின் பெயர் ................ (தேவநேயம்)

5. திருச்சிக்கு அருகில் ................ 'திருவள்ளுவர் தவச்சாலையும்', 'பாவாணர் நூலகமும்' அமைத்தவர் இரா.இளங்குமரனார். (அல்லூரில்)

## ஓரிரு வரிகளில் விடையளி

1. **தமிழின் பெருமை யாது?**

   ➢ தமிழ்மொழி செந்தமிழாகவும் செழுந்தமிழாகவும் உயிரோட்டத் தமிழாகவும் இருந்து வருவதே தமிழின் பெருமை ஆகும்.

2. **சொல் என்பதற்கு வேறு பொருள் எவை எவை?**

   ➢ சொல் என்பதற்கு வேறு பொருள் மொழி, நெல் என்பதாகும்.

3. **'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று கூறியவர் யார்?**

   ➢ தொல்காப்பியர் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்று கூறினார்.

4. **மொழி எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது? அவை யாவை?**

   ➢ மொழியை மூன்று வகையாக பிரித்துள்ளனர். அவை: 1. ஓரெழுத்து ஒருமொழி, 2. ஈரெழுத்து மொழி, 3. இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகள் உடைய மொழி.

5. **ஓரெழுத்து ஒருமொழியில் இடம்பெறும் எழுத்துகளின் எண்ணிக்கை எத்தனை?**

   ➢ ஓரெழுத்து ஒரு மொழியில் இடம்பெறும் எழுத்துகளின் எண்ணிக்கை 42 (நாற்பத்து இரண்டு) ஆகும்.

6. **இரா.இளங்குமரனார் ஆற்றிய பணிகள் எவை எவை?**

   ➢ பள்ளி ஆசிரியராக, நூலாசிரியராக, இதழாசிரியராக, உரையாசிரியராக, தொகுப்பாசிரியராகப் பன்முகத் திறன் பெற்றவர்.

7. **இளங்குமரனார் இயற்றிய நூல்களை எழுதுக.**

   ➢ இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம் ஆகியவை இளங்குமரனார் இயற்றிய நூல்களாகும்.

கற்கண்டு

# இயல் ஒன்று

# எழுத்துகளின் பிறப்பு

XUZDN

| நோக்கம் | |
|---|---|
| | ➢ சொற்களின் பிறப்பு முறைகளை அறிந்து உரிய முறையில் ஒலித்தல்.<br>➢ உரிய ஒலிப்பு முறை மூலம் எழுத்துகளை பொருள் வேறுபாட்டிற்கு இணங்கப் பயன்படுத்துதல். |

## மதிப்பீடு (பக்கம்.19)

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் ..................

அ) இ, ஈ ஆ) உ, ஊ இ) எ, ஏ ஈ) அ, ஆ **[ஆ) உ, ஊ]**

2. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ..................

அ) மார்பு ஆ) கழுத்து இ) தலை ஈ) மூக்கு **[இ) தலை]**

3. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ..................

அ) தலை ஆ) மார்பு இ) மூக்கு ஈ) கழுத்து **[ஆ) மார்பு]**

4. நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் ..................

அ) க், ங் ஆ) ச், ஞ் இ) ட், ண் ஈ) ப், ம் **[இ) ட், ண்]**

5. கீழ்இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து ..................

அ) ம் ஆ) ப் இ) ய் ஈ) வ் **[ஈ) வ்]**

### பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| க், ங் | - | நாவின் இடை, அண்ணத்தின் இடை | **நாவின் முதல், அண்ணத்தின் அடி** |
| ச், ஞ் | - | நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி | **நாவின் இடை, அண்ணத்தின் இடை** |
| ட், ண் | - | நாவின் முதல், அண்ணத்தின் அடி | **நாவின் நுனி, அண்ணத்தின் நுனி** |
| த், ந் | - | நாவின் நுனி, அண்ணத்தின் நுனி | **நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி** |

## சிறுவினா

1. **எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?**

   - உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன. இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர்.

2. **மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?**

   - வல்லின மெய் எழுத்துகள் மார்பை இடமாகவும்,
   - மெல்லின மெய் எழுத்துகள் மூக்கை இடமாகவும்,
   - இடையின மெய் எழுத்துகள் கழுத்தை இடமாகவும் கொண்டு பிறக்கின்றன.

3. **ழகர, லகர, ளகர மெய்களின் முயற்சிப் பிறப்பு பற்றி எழுதுக.**

   - ழகரம் மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கின்றன.
   - லகரம் மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.
   - ளகரம் மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.

## கற்பவை கற்றபின் (பக்கம்.19)

'ஆய்தம்' இச்சொல்லில் உள்ள ஒவ்வோர் எழுத்தின் வகையையும், அது பிறக்கும் இடத்தையும் பட்டியல் இடுக.

| எழுத்துகள் | ஆ | ய் | த | ம் |
|---|---|---|---|---|
| வகை | உயிரெழுத்து | இடையினம் | வல்லினம் | மெல்லினம் |
| பிறக்கும் இடம் | கழுத்து | கழுத்து | மார்பு | மூக்கு |

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. உயிரெழுத்துகள் பன்னிரண்டும் ................. இடமாகக் கொண்டு பிறக்கின்றன. **(கழுத்தை)**
2. வல்லின எழுத்துகள் ................. இடமாகக் கொண்டு பிறக்கின்றன. **(மார்பை)**
3. வாய் திறத்தலாகிய முயற்சியில் பிறக்கும் எழுத்துகள் ................. **(அ, ஆ)**
4. மேல்வாய்ப்பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் ................. **(த், ந்)**
5. ஆய்தம் ................. எழுத்துகளின் வகையாகும். **(சார்பு)**

## பொருத்துக.

| எழுத்துகள் | | | பிறக்கும் இடம் | |
|---|---|---|---|---|
| அ. | வல்லினம் | - | 1. | தலை |
| ஆ. | மெல்லினம் | - | 2. | மார்பு |
| இ. | இடையினம் | - | 3. | மூக்கு |
| ஈ. | ஆய்தம் | - | 4. | கழுத்து |

**விடை: அ - 2, ஆ - 3, இ - 4, ஈ - 1**

## ஓரிரு வரிகளில் விடையளி

1. **எழுத்துகள் பிறக்கும் இடங்கள் எவை எவை?**

   ➢ மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய உறுப்புகளிலிருந்து எழுத்துகள் பிறக்கிறது.

2. **எவற்றின் முயற்சியால் எழுத்துகள் பிறக்கின்றன?**

   ➢ இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியால் எழுத்துகள் பிறக்கின்றன.

3. **எழுத்துகளின் பிறப்பினை எத்தனை வகையாகப் பிரிப்பர்? அவை யாவை?**

   ➢ எழுத்துகளின் பிறப்பினை இரண்டு வகையாகப் பிரிப்பர் அவை: இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு ஆகும்.

4. **இதழ்கள் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகளைக் குறிப்பிடுக.**

   ➢ இதழ்கள் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகும்.

5. **ர், ழ் எவ்வாறு பிறக்கின்றன?**

   ➢ மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் ர், ழ் ஆகிய எழுத்துகள் பிறக்கின்றன.

# மொழியை ஆள்வோம் (பக்கம்.20)

## கேட்க

**தமிழ்மொழியை வாழ்த்திப் பாடிய வேறு கவிஞர்களின் பாடல்களைக் கேட்டு மகிழ்க.**

தமிழே ஆதித் தாயே வாழ்க!
தமிழர்க் கெல்லாம் உயிரே வாழ்க!
தமிழ் நாட்டுக்கும் பிற நாட்டுக்கும்
அமிழ்தாய் அமைந்த அம்மா வாழ்க!

- பாரதிதாசன்

## கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.

**தமிழ் எழுத்துகளின் தோற்றமும் வளர்ச்சியும்.**

''கல் தோன்றி மண் தோன்றா காலத்தே
முன் தோன்றிய மூத்த குடி நம் தமிழ்க் குடி''

இத்தகைய பழம்பெருமை மிகுந்தது நம் தமிழ்க்குடி ஆகும். தமிழ்க்குடியின் பழம்பெருமை போன்றே தமிழ்மொழியும் பழம்பெருமை வாய்ந்தது.

கி.பி. 2ஆம் நூற்றாண்டிலேயே முழுமையான தமிழ் இலக்கண நூல் தோன்றியது என்றால், மொழி என்று தோன்றியது என்று யாராலும் கூற இயலாது.

தமிழன் உணர்வு உடையவன். தன் கருத்துகளை, உணர்வுகளை சைகை மூலம் வெளிப்படுத்தினான். அதன் பிறகு குறியீடுகளால் வரைந்து காட்டினான்.

இன்று நம் தமிழ்மொழி ஒலிவடிவம், வரிவடிவம் பெற்று உலக மொழிகளில் செம்மொழியாக அமர்ந்து சிறப்புடன் திகழ்கிறது.

கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் அவன் எழுதிய எழுத்து வடிவம் பாறைகளில் அடையாளமாக காட்டி நிற்கின்றன. வட்டெழுத்துகளைத் தொடர்ந்து, தமிழெழுத்துகள் உருவாயின.

எழுத்துச் சீர்த்திருத்தங்களால் வளர்ச்சி பெற்று தமிழ் நாள்தோறும் புதுப்பொலிவுடன் பைந்தமிழாக திகழ்ந்து விளங்குகிறது.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பாடிய பாரதியின் கூற்று உண்மையிலும் உண்மை. உலக மொழிகள் பலவற்றைக் காட்டிலும் இனிமையும், பெருமையும், செழுமையும் நிறைந்த மொழியை நாமும் போற்றுவோம்!

## சொல்லக்கேட்டு எழுதுக.

உலக மொழிகளின் எழுத்து வரலாற்றை உற்று நோக்கினால் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை அறியலாம். அவை ஒரு வரிவடிவத்தை விட்டு மற்றொரு வரிவடிவத்தை ஏற்றுக் கொள்ளுதல்; இருக்கின்ற வரிவடித்தில் திருத்தம் செய்து கொள்ளுதல்; எழுத்து எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளுதல் ஆகியனவாகும். வரிவடிவ மாற்றம், வரிவடிவத் திருத்தம், எழுத்துகளின் எண்ணிக்கை மாற்றம் ஆகியவற்றை எழுத்துச் சீர்திருத்தம் என்று குறிப்பிடுகிறோம்.

## அகரவரிசைப்படுத்துக.

எழுத்து, ஒலிவடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், இரண்டல்ல, ஊழி, உரைநடை, ஔகாரம், ஓலைச்சுவடிகள், ஆரம்நீ, ஈசன், ஐயம்.

**அழகுணர்ச்சி, ஆரம்நீ, இரண்டல்ல, ஈசன், உரைநடை, ஊழி, எழுத்து, ஏழ்கடல், ஐயம், ஒலிவடிவம், ஓலைச்சுவடி, ஔகாரம்.**

---

## அறிந்து பயன்படுத்துவோம்

**மரபுத் தொடர்கள்**

தமிழ்மொழிக்கெனச் சில சொல் மரபுகள் உள்ளன. அவை பழங்காலம் முதலே பின்பற்றப்படுகின்றன.

**பறவைகளின் ஒலிமரபு**

| | | | | |
|---|---|---|---|---|
| ஆந்தை அலறும் | குயில் கூவும் | மயில் அகவும் | காகம் கரையும் | கோழி கொக்கரிக்கும் |
| கிளி பேசும் | சேவல் கூவும் | புறா குனுகும் | கூகை குழறும் | |

**தொகை மரபு**

| | | |
|---|---|---|
| மக்கள் கூட்டம் | ஆநிரை | ஆட்டு மந்தை |

**வினை மரபு**

| | | | | |
|---|---|---|---|---|
| சோறு உண் | தண்ணீர் குடி | பூக் கொய் | முறுக்குத் தின் | பால் பருகு |
| இலை பறி | சுவர் எழுப்பு | கூடை முடை | பானை வனை | |

---

## சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கோழி ............ (கூவும் / கொக்கரிக்கும்) **(கொக்கரிக்கும்)**
2. பால் ............ (குடி / பருகு) **(பருகு)**
3. சோறு ............ (தின் / உண்) **(உண்)**
4. பூ ............ (கொய் / பறி) **(கொய்)**
5. ஆ ............ (**நிரை** / மந்தை) **(நிரை)**

---

## மரபுப் பிழையை நீக்கி எழுதுக.

சேவல் கொக்கரிக்கும் சத்தம் கேட்டுக் கயல் கண் விழித்தாள். பூப்பறிக்க நேரமாகி விட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் கரைந்து கொண்டிருந்தது. பூவைப் பறித்ததுடன், தோரணம் கட்ட மாவிலையையும் கொய்து கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலைக் குடித்துவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்.

சேவல் **கூவும்** சத்தம் கேட்டுக் கயல் கண் விழித்தாள். **பூக்கொய்ய** நேரமாகி விட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் **கூவிக்**கொண்டிருந்தது. பூவைக் **கொய்ததுடன்**, தோரணம் கட்ட மாவிலையையும் **பறித்து**க் கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலைப் **பருகி**விட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்.

## கட்டுரை எழுதுக.

### நான் விரும்பும் கவிஞர்

**பாரதியார்**

**முன்னுரை:**

எட்டையபுரத்தில் உதித்த கவிஒளி எட்டுத்திக்கும் தமிழ் ஒளியைப் பரப்பிக் கொண்டிருக்கிறது. 'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தை பாலித்திட செய்தவர்' என்று பாரதிதாசன் புகழாரம் சூட்டிய புகழுக்கு உரியவர் பாரதி.

**இறை பக்தியில் பாரதி:**

விநாயகர், முருகன், சிவன், இயேசு, அல்லா எனப் பல்வேறு தெய்வங்களைத் தன் பாட்டில் வடித்தாலும், கண்ணன் மீதும் பராசக்தி மீதும் தீராத காதல் கொண்டவன். ''நின்னை சில வரங்கள் கேட்பேன் அவை நேரே இன்றெனக்கு தருவாய்!'' என்று கட்டளை இட்டவர். கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து ''தீராத விளையாட்டுப்பிள்ளை'' என்னும் பாட்டில் கண்ணனின் குறும்புத் தனத்தைப் படம் போட்டுக்காட்டியவர்.

**தமிழ்ப் பற்றில் பாரதி:**

''யாமறிந்த மொழிகளிலே இனிதாவது எங்கும் காணோம்'' ''செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே'' இந்த வரிகளின் ஆழத்தைப் பார்த்தால் பாரதியின் தமிழ்க்காதல் நமக்கு நன்கு புலப்படும்.

**சுதந்திர தாகம்:**

''இதந்தரும் மனையின் நீக்கி இடர்மிகுபட்டாலும்.... சுதந்திரதேவி நின்னைமறவேன்''. ''தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா, இப்பயிரை கண்ணீரால் அல்லவோ காத்தோம்'' அவ்வரிகளில் சுதந்திரத்தை உயிராக போற்றினார் என்பது விளங்குகிறது.

**பெண் விடுதலை:**

''வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம் என்னும் விந்தை மனிதர் தலைக்கவிழ்ந்தார்'' இவரைவிட பெண் விடுதலையைப் போற்றி எழுதிய கவிஞர் இலர்.

**பாப்பா பாட்டும் பாரதியும்:**

குழந்தைக்கு அறிவுரை சொல்வதில் பாரதிக்கு நிகர் பாரதியே! ''ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா'' ஒத்தப்பாட்டில் எத்தனை அன்புரைகள்.

**முடிவுரை:**

''எனக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல் என தன்னைப் பற்றி தானே கூறியது போல் வாழ்ந்து காட்டியவன் பாரதி. மனிதனாய், தமிழனாய், கவிஞனாய், வீரனாய் செம்மாந்து வாழ்ந்த பாரதி என்றென்றும் மகாகவியே! என் மனதில் நிறைந்த கவியே! வாழ்க அவன் புகழ்!

# மொழியோடு விளையாடு (பக்கம்.21)

## பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்து எழுதுக.

கல், பூ, மரம், புல், வாழ்த்து, சொல், மாதம், கிழமை, ஈ, பசு, படம், பல், கடல், கை, பக்கம், பா

| கள் | க்கள் | ங்கள் | ற்கள் |
|---|---|---|---|
| வாழ்த்துகள் | பூக்கள் | மரங்கள் | கற்கள் |
| கிழமைகள் | ஈக்கள் | மாதங்கள் | புற்கள் |
| கடல்கள் | பாக்கள் | படங்கள் | சொற்கள் |
| கைகள் | பசுக்கள் | பக்கங்கள் | பற்கள் |

## ஒரு சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.

**(எ.கா.) அணி** - பல அணிகளை அணிந்த வீரர்கள், அணிஅணியாய்ச் சென்றனர்.

**படி** - பள்ளிக்கூடப் படியை மிதித்து, நாள்தோறும் கல்வியை கருத்தெனப் படித்து வாழ்ந்தால் வாழ்வில் படிப்படியாய் முன்னேறலாம்.

**திங்கள்** - திங்கள் இதழில் பிறைத்திங்கள் குறித்து விளக்கமாக கட்டுரை எழுதப்பட்டிருந்ததை திங்கள்கிழமை வழிப்பாட்டுக்கூட்டத்தில் தலைமையாசிரியர் தெரிவித்தார்.

**ஆறு** - ஆறு நாட்களாக பெய்த கனமழையால் ஆறுகள் எல்லாம் பெருக்கெடுத்து ஓடின.

## சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.

1. **வட்டெழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து.**
   வளைந்த கோடுகளால் அமைந்த தமிழ் எழுத்து வட்டெழுத்து எனப்படும்.
2. **உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்.**
   உலகம் உள்ளவரையிலும் தமிழ்மொழி வாழட்டும்.
3. **வென்றதைப் பரணி பகைவரை ஆகும் பாடும் இலக்கியம்.**
   பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம் பரணி இலக்கியம் ஆகும்.
4. **கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.**
   உயிரெழுத்து பிறக்கும் இடம் கழுத்து ஆகும்.
5. **ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது.**
   தமிழ், அம்புவிடும் கலையை ஏகலை என்றது.

## நிற்க அதற்குத் தக..

**என் பொறுப்புகள்.**

1. எழுத்துகளைச் சரியான வரிவடித்தில் எழுதுவேன்.
2. அறிவிப்புப் பலகைகளில் உள்ள பிழைகளை உரியவரிடம் கூறித் திருத்தச்செய்வேன்.

## கலைச்சொல் அறிவோம்.

| | | | |
|---|---|---|---|
| ஒலிபிறப்பியல் | Articulatory phonetics | உயிரொலி | Vowel |
| மெய்யொலி | Consonant | அகராதியியல் | Lexicography |
| மூக்கொலி | Nasal consonant sound | ஒலியன் | Phoneme |
| கல்வெட்டு | Epigraph | சித்திர எழுத்து | Pictograph |

# இயல் - 1
## மாதிரி வினாத்தாள்

வகுப்பு : 8 மதிப்பெண் : 25
பாடம் : தமிழ் நேரம் : 45 நிமிடங்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 6x1=6**

1. **'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .........**
   அ) என் + றென்றும் ஆ) என்று + என்றும் இ) என்றும் + என்றும் ஈ) என் + என்றும்
2. **தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை .........**
   அ) 27 ஆ) 9 இ) 91 ஈ) 3
3. **இயற்கையைப் போற்றுதல் தமிழர் .........**
   அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு
4. **தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் .........**
   அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்
5. **Vowel என்பதன் கலைச் சொல்லாக்கம் .........**
   அ) வௌவால் ஆ) உச்சரிப்பு இ) உயிரொலி ஈ) மெய்யொலி
6. **பால் .........**
   அ) குடித்தான் ஆ) பருகினான் இ) உறிஞ்சினான் ஈ) சாப்பிட்டான்

**II. எவையேனும் மூன்றனுக்கு விடையளி 3x2=6**

7. **பொருத்துக.**

| எழுத்துகள் | | | பிறக்கும் இடம் | |
|---|---|---|---|---|
| அ. | வல்லினம் | - | 1. | தலை |
| ஆ. | மெல்லினம் | - | 2. | மார்பு |
| இ. | இடையினம் | - | 3. | மூக்கு |
| ஈ. | ஆய்தம் | - | 4. | கழுத்து |

8. இதழ்கள் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகளைக் குறிப்பிடுக.
9. திங்கள் எனும் சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.
10. **சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.**
    உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்
11. **பிழையான மரபுத்தொடரைத் திருத்தி எழுதுக.**
    புலி குட்டியைப் பார்த்து, யானை கத்தியது.

**III. எவையேனும் மூன்றனுக்கு விடையளி: 3x2=6**

12. ஐம்பூதம் எவை எவை?
13. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
14. உலகம் எவற்றால் ஆனது?
15. வட்டெழுத்து என்பது யாது?
16. எழுத்துகள் பிறக்கும் இடங்கள் எவை எவை?

**IV. எவையேனும் ஒன்றிற்கு விடையளி: 1x3=3**

17. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.
18. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

**V. அடிமாறாமல் எழுதுக. 4**

19. வாழ்க நிரந்தரம்!.. எனத் தொடங்கும் மொழி வாழ்த்துப்பாடலை அடிமாறாமல் எழுதுக.

# மாதிரி வினாத்தாள்

## இயல் - 1 - 3

## முதல் இடைப்பருவத்தேர்வு 2022-23

வகுப்பு : எட்டு மதிப்பெண் : 100

பாடம் : தமிழ் நேரம் : 2.30

### பிரிவு - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 10x1=10**

1. **உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று ............**
   அ) தலைவலி ஆ) காய்ச்சல் இ) புற்றுநோய் ஈ) இரத்தக்கொதிப்பு
2. **காந்தியடிகள் ............ போற்ற வாழ்ந்தார்.**
   அ) நிலம் ஆ) வையம் இ) களம் ஈ) வானம்
3. **நீலகேசி கூறும் நோயின் வகைகள் ............**
   அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
4. **'வருமுன்னர்' எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி ...........**
   அ) எடுத்துக்காட்டு உவமை அணி ஆ) தற்குறிப்பேற்ற அணி
   இ) உவமை அணி ஈ) உருவ அணி
5. **பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ............**
   அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்
6. **பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று ............**
   அ) படித்தான் ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது
7. **இயற்கையைப் போற்றுதல் தமிழர் ...........**
   அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு
8. **தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று அழைக்கப்படுபவர் ............**
   அ) பாரதிதாசன் ஆ) கண்ணதாசன் இ) வாணிதாசன் ஈ) சுரதா
9. **சுஜாதாவின் இயற்பெயர் ............**
   அ) எத்திராசுலு ஆ) ராஜேந்திரன் இ) ரங்கராஜன் ஈ) ரவிச்சந்திரன்
10. **விலங்குகள், மரங்கள், மனிதர்கள் உள்ளிட்ட யாவருக்கும் ............ பொதுவானது.**
    அ) உண்பது ஆ) உறங்குவது இ) சுவாசிப்பது ஈ) பருகுவது

### பிரிவு - ஆ

**II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளி: 3x2=6**

11. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?
12. புயல்காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?
13. நோயின் மூன்று வகைகள் யாவை?
14. ஏடு போதாது என்று வாணிதாசன் கூறக்காரணம் என்ன?
15. விடுதலைப் போருக்காக சி.சுப்பிரமணிய பாரதியார் நடத்திய இதழ்களைக் குறிப்பிடுக.

**III.பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளி: 3x2=6**

16. மனிதர்களின் கோரப் பசி யாது செய்யும்?
17. வட்டெழுத்து என்பது யாது?
18. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?
19. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?
20. மருத்துவம் எப்போது தொடங்கியது?

**IV.பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி: 7x2=14**

21. **உவமைத் தொடரைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.**
    வேலியே பயிரை மேய்ந்தது போல
22. **சீர்களை முறைப்படுத்தி எழுதுக.**
    யாழ்கோடு அன்ன கொளல் கணைகொடிது
    வினைபடு பாலால் செவ்விதுஆங்கு.
23. **தொடர்களை மாற்றுக.**
    அதிகாலையில் துயில் எழுவது நல்லது. (விழைவுத் தொடராக மாற்றுக)
24. **அடிக்கோடிட்ட எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக.**
    உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16. உலக இயற்கை நாள் அக்டோபர் 3.
25. 'திங்கள்' எனும் சொல்லை ஒரே தொடரில் அமைத்து பல பொருள் தருமாறு எழுதுக.
26. வென்றதைப் பரணி பகைவரை ஆகும் பாடும் இலக்கியம். (சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.)
27. **மரபுப்பிழையை நீக்கி எழுதுக.**
    குமரன் சோறு தின்று, பால் குடித்து, பழம் உண்டு உறங்கினான்.
28. **பிரித்து எழுதுக.** அ) ஐம்பால் ஆ) நீளுழைப்பு
29. **கலைச்சொல் தருக.** அ) Auditor ஆ) Gene

பிரிவு - இ

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஐந்து வரிகள் மிகாமல் விடையளி: 2x4=8**

30. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.
31. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?
32. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?
33. நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?

**VI.பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஐந்து வரிகள் மிகாமல் விடையளி: 2x4=8**

34. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?
35. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.
36. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.
37. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.

**VII. பின்வரும் வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு விடையளி: 4x4=16**

38. வலியில் நிலைமையான வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமெய்ந் தற்று - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியைக் கூறி அணி விளக்கம் தருக.

(அல்லது)

பிறிது மொழிதல் அணியை விளக்குக.

39. **கீழ்க்காணும் சொற்களைப் பெயரெச்சம் வினையெச்சம் என வகைப்படுத்துக.**
நல்ல, படுத்து, பாய்ந்து, எறிந்த, கடந்து, வீழ்ந்த, மாட்டிய, பிடித்து, அழைத்த, பார்த்து

40. **அகரவரிசைப்படுத்துக.**
எழுத்து, ஒலிவடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், இரண்டல்ல, ஊழி, உரைநடை, ஔகாரம், ஓலைச்சுவடிகள், ஆரம்நீ, ஈசன், ஐயம்.

41. ஓரெழுத்து ஒருமொழிகள் மகர, தகர, பகர வரிசையினை எழுதுக.

42. ஐம்பூதங்கள் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்படும் வேறு பெயர்களை எழுதுக.

43. **வினைமுற்றுக்குரிய வேர்ச்சொல்லை எழுதுக.**
1. நடக்கிறது, 2. வருக, 3. வாழிய, 4. பயின்றாள், 5. தருகின்றனர்,
6. சென்றனர், 7. உறங்கினாள், 8. பேசினாள்

**பிரிவு - ஈ**

**VIII. வினாக்களுக்கு விடையளி: 3x6=18**

44. அ) துன்பமின்றி வாழ நாம் கைக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் யாவை?

(அல்லது)

ஆ) பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?

45. அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' - கதையைச் சுருக்கி எழுதுக.

**IX. அடிமாறாமல் எழுதுக: 4+2=6**

47. ''போர்தற்கு அரும்பிணி'' - எனத் தொடங்கும் நீலகேசிப் பாடலை எழுதுக.

48. 'விலங்கொடு' - எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - உ**

**X. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஒன்றிற்கு விடையளி: 1x10=10**

49. விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

(அல்லது)

50. நான் விரும்பும் கவிஞர் தலைப்பில் கட்டுரை வரைக.

## இயல் - 4 - 6

## இரண்டாம் இடைப்பருவத்தேர்வு 2022-23

வகுப்பு : எட்டு மதிப்பெண் : 100

பாடம் : தமிழ் நேரம் : 2.30

### பிரிவு - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 10x1=10**

1. கற்றவருக்கு அழகு தருவது .........
   அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி
2. பகைவன் + என்றாலும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ............
   அ) பகைவென்றாலும் ஆ) பகைவனென்றாலும் இ) பகைவன்வென்றாலும் ஈ) பகைவனின்றாலும்
3. கல்வி பயிற்சிக்குரிய பருவம் ............
   அ) முதுமை ஆ) இளமை இ) நேர்மை ஈ) வாய்மை
4. ‘ஜெயகாந்தனோடு பல்லாண்டு’ என்னும் நூலை எழுதியவர் யார்?
   அ) கு.இராமசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) பி.ச.குப்புசாமி ஈ) கல்கி
5. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ............
   அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்
6. உடனிகழ்ச்சிப் பொருளில் ............ வேற்றுமை வரும்.
   அ) மூன்றாம் ஆ) நான்காம் இ) ஐந்தாம் ஈ) ஆறாம்
7. மறைபொருளைக் காத்தல் ............ எனப்படும்.
   அ) நிறை ஆ) சிறை இ) கறை ஈ) அறை
8. பானை ........... ஒரு சிறந்த கலையாகும்.
   அ) செய்தல் ஆ) சுடுதல் இ) வனைதல் ஈ) முடைதல்
9. ‘கூம்பொடு மீப்பாய் களையாது’ எனும் பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது?
   அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) பரிபாடல் ஈ) குறிஞ்சிப்பாட்டு
10. என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு ........... பெருகிற்று.
   அ) காரி ஆ) ஓரி இ) வாரி ஈ) பாரி

### பிரிவு - ஆ

**II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளி: 3x2=6**

11. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?
12. மழைச்சோறு பாடலில் உழவர் படும் வேதனை எவ்வாறு கூறப்படுகிறது?
13. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
14. குமரகுருபரர் எழுதிய நூல்கள் யாவை?
15. முதல் மூவர் என்று அழைக்கப்படுபவர் யார்?

# டால்பின் பப்ளிகேசன்ஸ் புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| சென்னை | M.K. ஸ்டோர்ஸ் - 044-25386143, F.A. ஸ்டோர்ஸ் - 97105-68240, M.R. ஸ்டோர்ஸ் - 91766-64596, அராபா புக் டிரேடர் - 044-25987868, கிங்ஸ் புக் ஹவுஸ் - 044-25367660, பிஸ்மி புக் சென்டர் - 044-25380666, லிம்ரா புக் சென்டர் - 99400-39953, பிரின்ஸ் புக் ஹவுஸ் - 044-42053926, நூர் புக் சென்டர் - 81487-23350, பழனிராஜ் - 98414-94023, தாம்பரம் : ஸ்ரீராம் அன் கோ - 044-22266431, ரெட்ஹில்ஸ் : திருமலை புக் சென்டர் - 98411-53261 |
| மதுரை | மனோ புக் சென்டர் - 0452-2621577, ஜெயம் புக் சென்டர் - 0452-2623636, வெற்றி புக் சென்டர் - 98434-61624, M.P.S.S. புக் ஷாப் - 80981-51515, சன்மதி டிரேடர்ஸ் - 97872 61333, மீனாட்சி புக் - 94432 62763, M.V. சதீஸ்குமார் - 98433-49892 |
| கோவை | மெஜெஸ்டிக் புக் ஹவுஸ் - 99943 43334, கண்ணன் புத்தக நிலையம் - 95858 88890, சேரன் புக் ஷாப் - 0422-2396623, முருகன் புக் டிப்போ - 93611-11510, பொள்ளாச்சி ; கலைமகள் ஸ்டோர்ஸ் - 04259-228738, அமிர்தம் பேப்பர் மார்ட் - 98651-03333, அன்னூர் - ஸ்ரீ கார்த்திகேயா ஸ்டோர்ஸ் - 94436 52226 |
| திருச்சி | ராசி பப்ளிகேசன்ஸ் - 0431-2703692, சுமதி பப்ளிகேசன்ஸ் - 0431-2703230, ஸ்ரீ முருகன் புக்சென்டர் - 0431-2703076, காயத்ரி புக் ஹவுஸ் - 97517-87873, ஸ்ரீராகவேந்திரா ஸ்டோர்ஸ் - 97887-57427, துறையூர் : கே.கே.ஆர் ஸ்டோர்ஸ் - 98656-58650 |
| விழுப்புரம் | சபரிநாதன் பிரதர்ஸ் - 04146-222581, புக் பார்க் - 99944-45135 |
| கள்ளக்குறிச்சி | கிருபா ஸ்டேசனரி - 04151-223114, |
| சேலம் | விக்னேஷ் புக் சென்டர் - 0427-4020409, S.V.S புக் ஷாப் - 98659-06262 |
| கடலூர் | பெல் புத்தக நிலையம் - 04142-652252 |
| சிதம்பரம் | வெற்றி புக் சென்டர் - 94432-22648, ஜெயம் புக் சென்டர் - 93630-60516 |
| தஞ்சாவூர் | ஸ்ரீனிவாசா புக் சென்டர் - 94865-25806, முருகன் பப்ளிகேசன்ஸ் - 96779-99905, கும்பகோணம் : ஸ்ரீ மார்கண்டேயா புக் டிப்போ - 0435-2420750, ஒரத்தநாடு: செல்வ விநாயகா பேப்பர், - 99435-57292, R.S.V புக் சென்டர் - 9942968475 |
| திருவண்ணாமலை | பிச்சாண்டி முதலியார் - 94432 14725, K. உதயகுமார் - 94874-09687 |
| வேலூர் | பூமிநாதன் - 93451 72090, வேலூர் புக் சென்டர் - 04162-213250, திருப்பத்தூர் (வேலூர்) : ரவிக்குமார் - 97863 15453 |
| ஈரோடு | செந்தில் புக் பேலஸ் - 04242-214886, தனா புக் கம்பெனி - 99943-71123, செல்வம் புக் சென்டர் - 98431-99697, பள்ளிப்பாளையம் : அம்மன் சஞ்சீவி புக் சென்டர் - 97860-40230, பவானி : தனா புக் சென்டர் - 94862-30921, கோபி : கிராவிட்டி புக் சென்டர்-9385728528 |
| திருவாரூர் | வி. ராமச்சந்திரன் - 94866-86627 |
| ராமநாதபுரம் | ராமநாதசுவாமி புக் ஷாப் - 94434-91772, அருணா நோட் புக் சென்டர் - 98425-37005 |
| சிவகங்கை | நியூ அய்யனார் புக் ஷாப் - 9994079013, காரைக்குடி : ஞானம் புக் சென்டர் 9789886575 |
| கிருஷ்ணகிரி | ஸ்ரீ ரமணா புக் ஹவுஸ் - 90253 13661 |
| திருநெல்வேலி | ஷியாமளா புக் ஷாப் - 94872-44633, சித்ராதேவி புக் சென்டர் - 76676-64293, ஸ்ரீகிருஷ்ணா புக்ஸ் - 98945-55484 |
| திண்டுக்கல் | அய்யனார் புக் சென்டர் - 95008-62024, பழனி : தர்சன் புக் எம்போரியம் - 8667218504 |
| திருப்பூர் | மகேஸ்வரி புக் ஸ்டால் - 94420-04254, சூர்யா பேப்பர் ஸ்டோர்ஸ் - 9994710201 |
| தேனி | மாயா புக்ஸ் & கிப்ட்ஸ் - 94439-29273, K. சுப்புராஜ் - 88703-16922 |
| நாமக்கல் | ஸ்ரீ கணபதி புக் சென்டர் - 70948-07585, திருச்செங்கோடு: சோழா புக் ஹவுஸ்-9842753949 |
| தர்மபுரி | ஸ்ரீ கிருஷ்ணா ஸ்கூல் நீட்ஸ் 9150070034 |
| தூத்துக்குடி | ஸ்ரீ துர்கா ஸ்டோர்ஸ் - 96003-33452, ஈகிள் புக் சென்டர் - 9486688333 |
| புளியங்குடி | ஸ்டூடண்ட் புக் சென்டர் - 79046-69191 |
| விருதுநகர் | சேது புக் சென்டர் - 94864-61400, அருப்புக்கோட்டை : பாலாஜி புக் சென்டர் - 94439-13738 |

விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம்
படித்துக் கொண்டிருப்போம்

## எமது வெளியீடுகள் (STATE BOARD)

6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**

10th to 12th Std - **ELITE ENGLISH**

6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**

10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**

6th to 10th Std - **சமூகஅறிவியல்**
(Tamil & English Medium)

8th to 10th Std - **அறிவியல்**
(Tamil & English Medium)


**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம், த.நா.

**Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646**
**93453 14146 / 93453 30937**

Mail us : dolphin.pub2005@gmail.com Visit us : www.kalvidolphin.com

கேட்பே

**94427 17794**
**63743 17883**